Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 191/2021 | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW1** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | சதீஸ்குமார் |
| Father/Husband Name | : | முனியய்யா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.2023

<u>(எதிரி ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது துத்திவலசையில் குடியிருந்து வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சீனிவாசன் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். என் அண்ணன் சீனிவாசன் இறப்பதற்கு முன்பு உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனக்கு உறவினர் ஆவார். ஆஜர் எதிரி உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வருகிறார். அதே ஆட்டோ ஸ்டாண்டில் தான் எனது அண்ணன் சீனிவாசனும் ஆட்டோ ஓட்டி வந்தார். ஆஜர் எதிரிக்கும் என் அண்ணன் சீனிவாசனுக்கும் 07.01.2020 ம் தேதி ஆட்டோ சவாரி பிடிப்பது சம்மந்தமாக விரோதம் ஏற்பட்டு எதிரி பவித்ரன் ஆட்டோ சாவியை வைத்து என் அண்ணன்

சீனிவாசனின் தாடையில் குத்தி கிழித்து காயம் ஏற்பட்டது. என் அண்ணனுக்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம். அதிலிருந்து எதிரி பவித்ரனுக்கும் என் அண்ணன் சீனிவாசனுக்கும் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தார்கள். 09.01.2020ம் தேதி மாலை 05.30 மணியளவில் நானும், என் அண்ணன் சீனிவாசனும் எனது இருசக்கரவாகனம் TN 65 L 6364 Honda Shine வாகனத்தில் நான் வாகனத்தை ஓட்ட என் அண்ணன் சீனிவாசன் பின்னால் அமர்ந்து உச்சிப்புளியிலிருந்து இராமநாதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது நடுவலசை புயல்காப்பகம் அருகே ஆஜர் எதிரி பவித்ரன் ஓட்டி வந்த ஆட்டோவை வைத்து எங்கள் இருசக்கர வாகனத்தில் மீது பின்புறம் மோதிவிட்டார். அதனால் நானும், என் அண்ணன் சீனிவாசனும் பைக்கில் இருந்து கீழே விழுந்துவிட்டோம். அப்போது எதிரி எங்களை பார்த்து இன்னுமாடா சாகவில்லை என சொல்லிவிட்டு ஓடிவிட்டார். என் அண்ணன் சீனிவாசனுக்கு வலது, இடது நெற்றி, பின்தலை, இரண்டு முழங்கால்கள் மற்றும் இரண்டு முழங்கைகளில் காயம் ஏற்பட்டது. எனக்கு வலது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டது. காயம்பட்டவுடன் அந்த வழியாக வந்த கோவிந்தன் என்பவர் எங்களுக்கு உதவி செய்து ஆம்புலன்ஸ் மூலமாக இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போனார்கள். அங்கு 1/2 மணி நேரம் மருத்துவ பரிசோதனை செய்துவிட்டு அதோடு என் அண்ணன் சீனிவாசனுக்கு நிலைமை சரியில்லாததால் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு கொண்டுபோகச் சொன்னார்கள். எனது அண்ணன் சீனிவாசனை மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு வந்து அதிகாலை 01.00 மணிக்கு புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1.** எனது அண்ணன் சீனிவாகனை மதுரை விக்ரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து அங்கு பார்க்க முடியாது என சொல்லிவிட்டதால் திரும்ப 10.01.2020ம் தேதி காலை 09.00 மணியளவில் எனது அண்ணன் சீனிவாசன் இறந்துவிட்டார். அதோடு என் அண்ணன் சீனிவாசன் பிரேதத்தை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.